# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

---

## அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான முன்மொழிவுகள் -2016

கௌரவ பிரதம மந்திரி, கௌரவ சபாநாயகர்

மற்றும்

அரசியலமைப்பு சீர்திருத்த மக்கள் பிரதிநிதிகள் குழுவிற்கு சமர்பிக்கப்பட்டது.

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான முன்மொழிவுகள்

**முகவுரை**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது எதிர்கால அரசியலமைப்பில் ஒரு செழிப்பான அரசியலமைப்பின் உரிமைகள் சட்டமூலத்தை உள்ளடக்குவதற்கும் மேலாக அரசியலமைப்பு ரீதியான ஆழ்ந்த மனித உரிமைகள் பாதுகாப்பின் தேவைப்பாடு மிக அதிகமாக இருக்க வேண்டும் என்னும் கண்ணோட்டத்தில் இருக்கின்றது.

1. வலுவேறாக்கம் மற்றும் சமநிலைக்குமான சிறந்த முறைமையை உத்தரவாதப்படுத்தல் மற்றும்

2. பொது பாதுகாப்பு ஆட்சிமுறைக்கான உறுதியான ஒழுங்குவிதிகள்

ஆகிய இரண்டு மிகமுக்கிய பரிமாணங்கள் சீர்திருத்த செயன்முறையின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

<u>**பிரத்தியேகமான முன்மொழிவுகள்**</u>

### 1. *அரசியலமைப்புக் கோட்பாடுகள்*

அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள் அரசியலமைப்பின் முகவுரையிலோ அல்லது பிரத்தியேகமான ஏற்பாடுகளிலோ தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்:

- மக்களின் இறைமையே ஆட்சியின் அடித்தளமாக இருத்தல் வேண்டும்.
- அரசின் வெளிப்படைத்தன்மையும் வகைசொல்லும் பொறுப்பும்
- அரசியலமைப்பின் அதியுயர் நிலை
- பன்மைத்துவம் மக்களின் உள்ளார்ந்த மனித உரிமைகள் மற்றும் கௌரவத்திற்கான சமத்துவம் தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் மதிப்பளித்தல்
- எல்லோரதும் மதச் சுதந்திரத்தை மதித்தல்
- சமூக நீதிக்கு மதிப்பளித்தல்
- அதிகாரப்பகிர்வு
- சகல விலங்கினங்களின் பாதுகாப்பு உள்டங்களாக சுற்றாடல் பாதுகாப்வினை விசேடமாக வலியுறுத்துவதுடன் எதிர்கால சந்ததியினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்

## 2. உரிமைகள் சட்டமூலம்

மனித உரிமைகள் தொடர்பான அமைச்சுக்களுக்கிடையேயான குழுவின் தலைவர் அமைச்சர் மகிந்த சமரசிங்கவினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் மூலம் 2006 ம் ஆண்டில் வரையப்பட்டு 2009ம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட உரிமைகள் சாசனத்தின் வரைவானது, மனித ஆணைக்குழுவினால் ஆமோதிக்கப்பட்டு இணைக்கப்படுகின்றது. அது கீழ்வரும் திருத்தங்களுக்குட்பட்டும் மேலும் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பின் இன்றியமையாத நீக்கத்தின் பொருட்டும் வழிமொழியப்படுகின்றது.

- பாகுபாட்டின்மைக்கான சட்ட விதியின் கூற்றினை மேலும் வலுப்படுத்த பால் அடையாளம் பாரபட்சமின்மை என்ற பதத்தை சேர்க்க வேண்டும். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பாலியல் நாட்டம், பால் அடையாளம் மற்றும் இயலாமை என்பவை பாரபட்சத்தின் அடிப்படையில் தடை செய்ய வேண்டியதன் அவசியம் தொடர்பாக பல பிரதிநிதித்துவங்களைப் பெற்றுக் கொண்டது. மேலும் முதலும் இறுதியும், மற்றும் பல காரணிகளான வயது மற்றும் தாய்மை என்பன வரையப்பட்ட சாசனத்தில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறான கூற்றானது தெளிவாகவும் வெளிப்படையான முறையில் எமது சர்வதேச கடமைகளுக்கேற்ப அமைய வேண்டும்--" அவ்வாறான எவ்வித காரணங்களின் அடிப்படையிலும் பாரபடசங்களிற்கு அனுமதிக்கப்படக் கூடாது…"

- பலவந்தமாக காணாமற்போதலில் இருந்து விடுபடும் சுதந்திரத்திற்கான உரிமையை அங்கிகரித்தல்

- சட்ட உதவிக்கான உரிமை அல்லது பரந்த உரிமையான நீதியை அணுகலுக்கான உரிமையை அங்கிகரிக்க வேண்டும்.
- பகிரங்க வாழ்வின் பல்துறைகளின் குறைவான பங்களிப்பு மற்றும் வரலாற்று ரீதியான நீதியின்மை ஆகியவற்றை நிவர்த்தி செய்ய செயல் நடவடிக்கைகளை அறிமுகம் செய்ய அரசுக்கான நேர்மறையான கடப்பாடுகளை உள்ளடக்குதல்

- பொருத்தமான சூழ்நிலையில் தனியார் அடிப்படை உரிமைகளை மீறும்போது தரப்பினருக்கான கிடையான கடப்பாடு

- நீதிமன்றங்களை இலகுவாக அணுகி நீதியைப் பெற்றுக்கொள்வதை இலகுவாக்க பொருத்தமான பிராந்திய நீதிமன்றங்களுக்கு அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கமானது பரவலாக்கப்படல் வேண்டும்.

- 2007 அம் ஆண்டின் 56 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பொருத்தனைச் சட்டமானது இரத்துச் செய்யப்படுவதுடன் அதிலுள்ள உரிமைகள் எதிர்கால சட்டமூலத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டு அனைத்து உரிமைகளும் உள்ளடக்கப்படல் வேண்டும். மனித உரிமைகள் தரப்படுத்தல் அங்கே இருத்தலாகாது.

- உரிமைகள் சட்டமூலத்தில் அனைத்து உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்பட்டு நிறுவப்படல் வேண்டும். அவ்வாறு இவ்வுரிமைகளில் ஏதேனும் குறைதலுக்கு அல்லது இரத்துச் செய்தலுக்கு உட்பட வேண்டியிருப்பின் பாராளுமன்றத்தில் ஒரு சிறப்பு பெரும்பான்மை மூலம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதற்கு மேலதிகமாக ஒரு சர்வஜனவாக்கெடுப்புக்கும் உட்படுத்தப்படவேண்டுமே. அடிப்படை உரிமைகள் திருத்தத்தை அனுமதிக்காத அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பு கோட்பாடு நிறுவுவது மாற்றீடாகும்.

- உரிமைகள் சட்டமூலம் பொருள்கோடலின்போது மனித கௌரவம் மற்றும் சமத்தவ உரிமைகளின் பாதுகாப்பிற்கு முதன்மைத்துவம் கொடுக்க வேண்டும். இதன்போது சர்வதேச சட்டத்தின் நோக்கம் மற்றும் அரசியலமைப்பிலுள்ள அரச கொள்கை வழிகாட்டிக்கோட்பாடுகள் என்பவற்றை கருத்திற் கொள்ள வேண்டும்.

3. **சமநிலைக்கான ஒரு உறுதியான முறைமையை உருவாக்கல்:**

- அரசியலமைப்புப் பேரவையானது அரசியல் பிரதிநிதிகளைவிட மதிப்புக்குரிய குடிமக்களிலிருந்து அதிகளவான உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும். இப்பேரவை சமூகப் பல்வகைமையைப் பிரதிபலிக்க வேண்டும்.

- நீதிச்சேவை ஆணைக்குழுவினை வலுப்படுத்துவதன் மூலம் நீதித்துறைச் சுதந்திரத்தை மேம்படுத்தல் வேண்டும். நீதிச்சேவை ஆணைக்குழுவானது அதன் உறுப்பினர்களிடையே மதிப்பிற்குரிய ஓய்வுபெற்ற நீதியரசர்கள் மற்றும் அதிகார பூர்வ மற்றும் அதிகாரபூர்வமற்ற சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் மற்றும் கல்வியலாளர்கள் என்போரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

- இயற்கை நீதி கோட்பாடுகளிற்கு இணங்கிய வகையில் நீதிபதிகளை நீக்குவதற்கான குறிப்பிட்ட நடபடிமுறையானது சட்டத்தின் மூலமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- சட்டங்களிற்கான நீதித்துறை மீளாய்வை உறுதிப்படுத்தப்படுவது அத்தியாவசியமானது. அவ் மீளாய்வானது வருங்கால விளைவைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். சட்டங்கள் இயற்றப்பட முன்னரும் மீளாய்வு இருத்தல் வேண்டும்.

4. **பொதுப் பாதுகாப்பு பரிபாலனக்கிரமம்**

- இலங்கையின் சர்வதேச மனித உரிமைகளுக்கான கடப்பாடுகளுக்கு (குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேசப்பொருத்தனையின் உறுப்புரை 4) அமைய இருத்தல் அத்தியாவசியமானது.

- நாட்டின் ஸ்தீரதன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது மட்டுமே நாட்டில் அவசகால நிலை பிரகடனப்படுத்த வேண்டும்.

- அவசரகால நிலைமை பிரகடனம் மீதான நீதித்துறை மீளாய்வு உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

- அவ்வாறே அவசரகால ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் மீதான நீதித்துறை மீளாய்வானது வெளிப்படையாக வழங்கப்படல் வேண்டும்.

- அவசரகால நிலையானது தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு மேல் நீடித்தால் பாராளுமன்றம் ஒரு சிறப்பு பெரும்பான்மை மூலம் அதன் நீடிப்புக்கான அனுமதியை வழங்க வேண்டும்.

- உரிமைகள் வரைவு சாசனத்தில் (மேலே) அவசரகாலநிலையின் போது வரையறுக்கப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆமோதிக்கின்றது.

5. **சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகள்**

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அதன் ஆணைக்கமைவாக, பொது பிரயோகத்தை கொண்டிருக்க முடியும் என்பதை நன்கு புரிந்து கொண்டு மனித உரிமை உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கான செயல்முறை ஒன்றை பரிந்துரைக்கின்றது.

- நிறைவேற்றுத்துறையானது சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகளில் கையொப்பமிடவேண்டும் என்ற தன் எண்ணத்தினை பாராளுமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும். பாராளுமன்றம் தீர்மானம் மூலம் ஏற்று அங்கிகரிப்பதற்கு அனுமதியளித்தல்

வேண்டும். இத்தீர்மானமானது உருவாக்கப்படவிருக்கும் சட்டத்திற்கு பாராளுமன்றம் அனுமதியளிக்கும் என்பதை பிரதிபலிப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

- மனித உரிமை உடன்படிக்கை ஏற்று அங்கிகரிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குள் உருவாக்கப்படவிருக்கும் சட்டத்தினை சமர்பிப்பதற்கு அரசாங்கம் கட்டுப்பட வேண்டும். மனித உரிமை உடன்படிக்கை அங்கிகரிக்கப்பட்டு ஒரு ஆண்டுக்குள அமுல்படுத்தும் சட்டம் இயற்றப்படாவிட்டால் அங்கிகரிக்கப்பட்ட உடன்படிக்கையிலுள்ள கணிசமான உரிமைகளுக்கு சட்டரீதியான அங்கீகாரத்தினை நீதிமன்றங்களால் வழங்க அதிகாரமளிக்கப்பட வேண்டும்.

### 6. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஆணைக்குழுவானது 1996 ஆம் ஆண்டின் 21ம் இலக்கச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஆணையாளர்களின் நியமனமானது 1978ம் ஆண்டின் அரசியலமைப்பின் 19ம் திருத்ததத்தின் கீழ் கையாளப்படுகின்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது (அவ்வாறே அனைத்து சுதந்திர ஆணைக்குழுகளும்) எதிர்கால அரசியலமைப்பில் ஒரு அரசியலமைப்பால் நிறுவப்பட்ட அமைப்பாக அங்கிகரிக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கின்றது. அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும் மற்றும் அதன் பரிந்துரைகளுக்கிணங்கியதான பொது அதிகாரிகளின் கடமை என்பன அரசியலமைப்பில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தற்போதைய சட்ட கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பருந்துரைகளை முன்வைப்பதற்காக ஆய்வை ஆரம்பித்திருக்கின்றது.

### 7. மொழியியல் அணுகல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது எதிர்கால அரசியலமைப்பானது குடிமக்கள் அதன் உறுப்புகளை இலகுவாக வாசிக்கவும் அணுகவும் கூடியதாக மிகவும் எளிமையான மொழிநடையில் வரையப்படவும் மொழிபெயர்க்கப்படவும் வேண்டுமென பரிந்துரைக்கின்றது. தமது அடிப்படைச்சட்டம் என்ன கூறுகின்றதென்பதை அறிந்து கொள்வது ஒவ்வொறு குடிமக்களினதும் உரிமையாகும். இது அரசியலமைப்பின் உருவாக்கம் மற்றும் அரசியலமைப்பு ஆட்சியை முறைப்படுத்தல் என்பவை அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

## உரிமைகள் வரைவு சாசனம்

வரையப்பட்ட உரிமைகள் சாசனத்தை பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களுக்குட்படுத்தியும் 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் குறிப்புரைகளை அகற்றியும் எதிர்கால அரசியலமைப்பில் இணைத்துக் கொள்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஒப்புதல் செய்கின்றது.

உரிமைகள் சாசனத்தின் வரைவானது 2006-2009 கால இடைவெளியில் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சுக்களுக்கிடையேயான குழுவின் தலைவர் அமைச்சர் மகிந்த சமரசிங்கவினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் மூலம் வரையப்பட்டது. இச்செயற்குழுவானது, மனித உரிமைகள் துறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற கல்வியாளர்கள், சிவில் சமூக வழக்கறிஞர்கள், சட்டவாளர்கள் மற்றும் சட்ட வரைஞர் திணைக்கள பிரதிநிதிகள் என்போரை உள்ளடக்கியிருந்தது. தற்போதைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரான கலாநிதி தீபிகா உடகம அச்செயற்குழுவின் ஓர் உறுப்பினராக இருந்ததுடன் பொருளாதார சமூக கலாசார உரிமைகளுக்கான துணைக்குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.. அச்செயற்குழுவின் தலைவராக கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன (ஜனாதிபதி சட்டத்தரணி) பணியாற்றினார்.

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக சாசனத்தின் உறுதியான ஏற்பாடுகளையும் கட்டமைப்பையும் இச்செயற்குழு ஆழ்ந்து ஆராய்ந்தது. இதன்போது இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளையும் குறிப்பாக தென் ஆபிரிக்க அரசியலமைப்பு மற்றும் இந்திய அரசியலமைப்பு போன்ற ஒப்பீட்டுத்தன்மையுள்ள அரசியலமைப்பிலிருந்தும் விடயங்களை கருத்திற்கொண்டது.

இவ்வரைவு சாசனம் 1978 ஆண்டு அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தமாக அறிமுகப்படுத்த எண்ணப்பட்டது. 2009 இல் 26 ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் முடிவானது அவ்வரைவு சாசனத்தை பொதுமக்களுடன் பகிர்ந்து அவர்களின் கருத்துக்களை பெறவும் ஏற்றுக்கொள்ளவும் ஒரு உகந்த நேரமாக இருந்தது. எனினும் அது மக்களிடம் பொது விவாதத்துக்காக விடப்பட்டு பின்பு பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

## உரிமைகள் சட்டமூலத்திற்கான வரைவு

**உள்ளடக்கம்**

10 சிந்தனை, மனசாட்சி மற்றும் மத சுதந்திரம்

10 அ மனித கௌரவத்துக்கான உரிமை

10 ஆ வாழ்வதற்கான உள்ளார்ந்த உரிமை

10 இ சட்டத்தின் முன் ஒரு நபராக அங்கீகாரம் பெறும் உரிமை

11 சித்திரவதையில் இருந்து சுதந்திரம் பெறும் உரிமை

11 அ நபரின் பாதுகாப்புக்கான உரிமை

12 சமத்துவத்துக்கான உரிமை மற்றும் பாரபட்சத்தில் இருந்து சுதந்திரம்

13 எதேச்சதிகாரமாக கைது, தடுப்பு மற்றும் தண்டனைகள் மற்றும் பின்னோக்கியாளும் தண்டனைச்சட்டத்தை தடுத்தல்

14. கருத்துக்களை கொண்டிருக்கும் சுதந்திரம்

14 அ தகவல் சுதந்திரம் மற்றும் பிரசுரிக்கும் சுதந்திரம் உள்ளடங்களாக பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்

14 ஆ தகவல்களை அணுகும் உரிமை

14 இ அமைதியாக ஒன்றுகூடும் உரிமை

14 ஈ ஒருங்கு சேரும் சுதந்திரம்

14 உ தொழிற்சங்க உரிமைகள்

14 ஊ மதத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம்

14 எ கலாச்சாரம் மற்றும் மொழியை அனுபவிக்க மற்றும் ஊக்குவிக்கும் உரிமை

14ஏ ஒரு சட்டப்பூர்வமான வர்த்தகத்தில், பணியில், தொழிலில், வணிகத்தில் அல்லது நிறுவனத்தில் ஈடுபட சுதந்திரம்.

14 ஐ நடமாடும் சுதந்திரம்

14 ஒ இலங்கை திரும்புவதற்கான சுதந்திரம்

14 ஓ அந்தரத்துக்கான மற்றும் குடும்ப வாழ்க்கைக்கான சுதந்திரம்

14 ஔ சொத்துடைமைக்கான உரிமை

14 அஅ குடும்ப உரிமைகள்

14 அஆ சிறுவர் உரிமைகள்

14 அஇ கல்விக்கான உரிமை

14 அஈ சுரண்டலில் இருந்து சுதந்திரம்

14 அஉ தொழிலாளர்கள் உரிமைகள்

14 அஊ சுகாதாரத்துக்கான உரிமைகள்

14 அஎ சமூக உரிமைகள்

14 அஏ போதிய சூழலுக்கான உரிமை

14 அஐ அடிப்படை உரிமைகளை மதிக்க, பாதுகாக்க மற்றும் முன்னேற்ற அரசிற்குள்ள கடமை

15 அவசர காலநிலைமைகளில் அடிப்படை உரிமைகள் பாதுகாப்பு

16 இருக்கின்ற எழுதப்பட்ட சட்டம் மற்றும் எழுதப்படாத சட்டம்

17 அரசின் நடவடிக்கைகள் மூலம் அடிப்படை உரிமை மீறல் இடம் பெறுகையில் தீர்வு

17 அ குடியுரிமையற்ற நிரந்தமாக மற்றும் சட்டபூர்வமான குடியிருப்பாளர்களின் உரிமைகள்

17 ஆ அடிப்படை உரிமை மற்றும் மொழி உரிமை உறுப்புரைகளின் பொருள்கோடல்

35 வழக்கிடப்படுவதிலிருந்து ஜனாதிபதிக்கான விதிவிலக்கு

126 அடிப்படை உரிமைகள் மற்றும் மொழி உரிமைகளின் நியாயாதிக்கமும் அதன் கையாளுகையும்